செய்தி வெளியீடு எண்: 35 நாள்: 21.09.2017

***தேனி மாவட்டம்,***
***தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி கார்ப்பரேசன் லிமிடெட் நிறுவனத்தின் சார்பில் செட்டாப்பாக்ஸ்களை***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கினார்:***

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி லிமிடெட் நிறுவனத்தின் சார்பில் செட்டாப்பாக்ஸ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம்,இ.ஆ.ப., அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், தமிழக அரசின் உத்தரவின்படி, தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி லிமிடெட் நிறுவனத்தின் சார்பில் சந்தாதாரார்களுக்கு குறைந்த விலையில் சேனல்கள் வழங்கப்பட்டு வருகின்றனது. 200 சேனல்கள் ரூ.125/- (158 இலவச சேனல்கள், 42 கட்டணச்சேனல்கள்) ஜி.எஸ்.டி வரி 18 சதவீதம் சேர்த்து வழங்கப்படுகின்றது. 300 சேனல்கள் (158 இலவச சேனல்கள், 142 கட்டணச்சேனல்கள்) ஜி.எஸ்.டி வரி 18 சதவீதம் சேர்த்து வழங்கப்படுகின்றது.

மேலும், உள்ளுர் கேபிள் டி.வி ஆபரேட்டர்கள் ஒரு செட்டாப்பாக்ஸ்க்கு ரூ.180/- வீதம் (அதாவது 6 தவணைகளில் மாதம் ஒன்று ரூ.30/- மட்டும்) செலுத்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்துடன கேபிள் டி.வி ஓர்க்கர்ஸ் வெல்பர்டு போர்டு (Cable TV Workers Welfare Board) விரைவில் புதுப்பிக்கப்பட உள்ளது. ஏற்கனவே வழங்கப்பட்ட அனைத்து சலுகைகளும் இந்த நலவாரியத்தின் மூலம் வழங்கப்படவுள்ளன. உள்ளுர் கேபிள் டி.வி ஆப்ரேட்டர்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி நிறுவனத்தின் பங்குதாரராக இருக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.தங்கவேல் அவர்கள், கேபிள் டி.வி வட்டாட்சியர் திரு.குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**